மின்னிதழ்
# தேசியம்
THESIYAM තේසියම්
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 100 | 08.07.2023 (சனிக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00

## முல்லைத்தீவில் அகழப்படும் மனித புதைகுழி..!

### அரசாங்கம் தடயங்களை அழிப்பதற்கு முயற்சி...!

முல்லைத்தீவில் அகழப்படும் மனித புதைகுழிகள் தொடர்பில் அரசாங்கம் தடயங்களை அழிப்பதற்கு முயற்சிக்கலாம் என்றும் அந்த விடயத்தில் நீதியினை பெற்றுக்கொள்வதற்கு உலகநாடுகள் உதவி செய்ய வேண்டும் என்றும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி யோகராசா தனரன்சினி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு

பக்கம் 4

# பிரபாகரன் உயிருடன்..? ஆதாரங்கள் தொடர்பில்

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன்



தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்து விட்டார் என்பது உறுதி. அதனை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்கள் பாதுகாப்பு அமைச்சிடம் உள்ளன. பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டே குறித்த ஆதாரங்களை வெளியிடப்படாமலுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

அத்தோடு, தற்போது நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காக சில குழுக்கள் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறான குழுக்கள் தொடர்பில் பாதுகாப்பு துறை மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் வியாழக்கிழமை (06) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பக்கம் 4




பக்கம் 4

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி : உண்மை, நீதி, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தக்கோரி! முல்லையில் கவனயீர்ப்பு!!

## வடக்கில் சீனி தொழிற்சாலை : பின்னணியில் உள்ள உண்மைகள்

### மிகவும் கசப்பானவை : பொ. ஐங்கரநேசன்

வவுனியாவில் கரும்புத் தோட்டம் மற்றும் சீனி தொழிற்சாலையை அமைக்கும் இத்திட்டத்தினை முன்னெடுக்கும் தரப்பினர், இது போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கென வாராது வந்த வரப்பிரசாதம் என்று இனிப்பாய் சிலாகித்து வருகின்றனர்.

ஆனால், இதன் பின்னணியில் உள்ள உண்மைகள் மிகவும் கசப்பானவை. வடக்கில் சீனி தொழிற்சாலை இனிப்பு தடவிய விஷம் என தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (07) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட பொ. ஐங்கரநேசன், வவுனியாவில் சீனி

பக்கம் 4

## வளங்கள் இருந்தும் எமக்கு உரிமையும் இல்லை அதிகாரமும் இல்லை

### சாணக்கியன்



எமக்கும் எமது வட கிழக்கு மாகாணங்களுக்குரிய அதிகாரங்களை பகிர்ந்து கொண்டு அதற்கான அதிகாரங்களை வழங்குவார்கள் எனில் எம்மாலும் குறிப்பிட்ட சில

பக்கம் 4

He & She
FASHIONS
Ultimate Destination for
FASHIONS

NO. 323, 309, KASTHURIYAR ROAD, JAFFNA.

# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான நலன்புரி விடயங்கள் சட்டமாகப்படவுள்ளன !



பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான தொழில்சார் உரிமைகளையும், அவர்களுக்கான நலன்புரி சார் விடயங்களையும் பாதுகாப்பதற்கு தனியானதொரு சட்டம் இயற்றப்பட வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு தொழில் அமைச்சின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதற்கமைய இது தொடர்பான சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைத்து, அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தொழில் அமைச்சர் மனுச நாணயக்கார இணக்கம் தெரிவித்துள்ளார் என இ.தொ.காவின் உப தலைவரும், தேசிய தொழில் ஆலோசனை சபை உறுப்பினருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

நாட்டில் அமுலில் உள்ள தொழில் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட திருத்தங்கள் தொடர்பில் ஆலோசனைகள், யோசனைகள் மற்றும் கருத்துகள் பல தரப்புகளிடம் இருந்தும் பெறப்பட்டன. இது தொடர்பில் தொழில் அமைச்சர் தலைமையில் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

இவற்றை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச தொழில் சட்டமூலம் குறித்தான வரைவு நகல் தேசிய தொழில் ஆலொசனை சபையில் வியாழக்கிழமை (06) சமர்ப்பிக்கப்பட்டது.

பல பகுதிகளாக பிரிந்திருந்த தொழில்சார் சட்டங்களையும், நடைமுறைகளையும் ஒன்றிணைந்து, நாட்டில் ஒரே தொழில் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான உத்தேச வரைவு நகலே நேற்று முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வரைவு நகல் தொடர்பான தமது நிலைப்பாட்டை, கருத்துகளை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய தொழில் ஆலோசனை சபை உறுப்பினர்கள் முன்வைக்க வேண்டும்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பாரத் அருள்சாமி,

" இலங்கையின் பொருளாதார வளர்சியில் பெரும் பங்களிப்பை பெருந்தோட்ட தொழிலாளர்களே வழங்கினர். எனவே, பெருந்தோட்ட தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் மற்றும் நலன்புரி விடயங்களை உள்ளடக்கிய விசேட சட்டமொன்று இயற்றப்பட வேண்டும் என இதொகாவின் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஜனாதிபதி, தொழில் அமைச்சர், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் உள்ளிட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கு தற்போது வெற்றி கிட்டியுள்ளது.

தொழில் சட்டத்துக்கு புறம்பாக மேலதிக சட்டமாகவே இது அமுலுக்குவரும். இது பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைத்துள்ள அங்கீகாரமாகும்." - எனவும் பாரத் அருள்சாமி குறிப்பிட்டார்.

" கடந்த காலங்களில் கூட்டு ஒப்பந்தம்மூலமே நலன்புரி விடயங்கள் பாதுகாக்கப்பட்டன. எனினும், நலன்புரி விடயங்கள் முழுமையாக தொழிலாளர்களுக்கு கிடைக்கவில்லை. இந்நிலையில் தற்போது சட்டம் ஊடாக தொழில் தொழில் பாதுகாப்பு, நலன்புரி விடயங்களை பாதுகாக்க ஏற்பாடு இடம்பெற்றுள்ளது." - எனவும் பாரத் அருள்சாமி குறிப்பிட்டார்.

# மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம்!

## மண்டைதீவு விடயத்திலும் மாற்றமில்லை – ஈ.பி.டி.பி வலியுறுத்து!

EELAM PEOPLE'S DEMOCRATIC PARTY

மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தமானது. இதுவே எமது கட்சியின் நிலைப்பாடுமாகும். இதை எவரும் தட்டிப்பறிக்க முடியாது என தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளரும் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான ஐயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் மண்டைதீவு கிழக்கில் உள்ள, தனியாருக்கு சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான காணிகளும் அவர்களுக்கே உரியதெனவும் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை (07) யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்ற பத்திரிகையாளருடனான சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார் .

அவர் மேலும் கூறுகையில் ,

யாழ்ப்பாண மாவட்டம் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு கிழக்கு து/07 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள, 36 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை, கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நோக்கில், எதிர்வரும் 2023.07.12 ஆம் திகதி அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப்போவதாக நில அளவைத் திணைக்களத்தினரால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் தமது காணிகளை கடற்படையானது சுவீகரிக்க தாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவு கிழக்கு பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் அப்பகுதியில் உள்ள சுமார் ஏற்கனவே தனியாருக்கு சொந்தமான காணியில் முகாமிட்டுள்ளனர்.

இதனை எதிர்த்து கடந்த காலங்களிலும் மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் தற்போதும் குறித்த காணியை சொந்தமாக்கும் நோக்கில் அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப்போவதாக நில அளவைத் திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மக்களின் காணிகள் மக்களுக்கே உரியது. அதை நீதிக்குப் புறம்பாக அபகரிக்க முனைவது பொருத்தமற்றது. அந்தவகையில் குறித்த காணிகளின் உரிமையாளர்களது கோரிக்கை நியாயமானதாகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம்!



மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை (7) காலை 11 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பெற்றோர் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேண்டும்,வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும், எங்கே எங்கே உறவுகள் எங்கே?, வீடுகளில் வைத்து கொண்டு சென்ற உறவுகள் எங்கே?, வெள்ளை வேனில் கொண்டு சென்ற பிள்ளைகள் எங்கே?, ஓ.எம்.பியும் வேண்டாம், 2 இலட்சமும் வேண்டாம்., சரணடைந்த உறவுகள் எங்கே? உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது கருத்து தெரிவித்த மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா, ஐ.நா.சபையின் 53 வது கூட்டத்தொடர் இடம் பெற்று வருகிறது. எங்களுக்கு ஒரு நீதி கிடைக்க வேண்டும். தொடர்ந்து இவ்வாறு போராட்டங்களை முன்னெடுக்க முடியாது.

ஐ.நா சபையை நங்கள் இவ்வளவு காலமும் நம்பி வந்தோம் எங்களுக்கு நீதி கிடைக்கும் என்று. ஆனால் அந்த நீதியும் தாமதமாகிறது. இந்த அமர்விலையாவது எங்களுக்கு ஒரு நீதி கிடைக்க வேண்டும். கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நாங்கள் இந்த போராட்டத்தை வீதிகளில் நின்று முன்னெடுத்து வருகிறோம்.

ஆனால் எமக்கு எவ்வித நீதியும் கிடைக்கவில்லை. நாங்கள் உயிருடன் இருக்கும் வரை காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிய போராட்டம் தொடரும். தற்போது மனித புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றது. தற்போது முல்லைத்தீவிலும் புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இராணுவ முகாம்களை அகற்றினால் இன்னும் அதிக மனித புதைகுழிகள் கண்டுபிடிக்க முடியும்.

பிடித்துக் கொண்டு சென்ற பிள்ளைகள் இல்லை என்றால் அவர்கள் தான் கொலை செய்து புதைத்திருக்க வேண்டும்.

இராணுவ முகாம்களில் புதைக்கின்ற மையினால் தான் அவர்கள் காணிகளை விடுகிறார்கள் இல்லை. அதனாலேயே சிங்கள மக்களை குடி யேற்றவும், புத்தர் கோவிலை அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கின்றார்.

இதன் காரணமாக மனித புதை குழிகள் மூடி மறைக்கப்படும். எனவே ஐ.நா.கூட்டத்தொடரில் ஆவது எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில்
தவழும் மின்னிதழ் மற்றும்
அச்சு வடிவிலும் தினசரி மற்றும்
வார வெளியீடாக வெளிவரும்
தேசியம் பத்திரிகைக்கு
தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும்
ஆக்கபூர்வமான கட்டுரைகள்,
கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள்,
செய்திகள் போன்றவற்றை எமக்கு
அனுப்பி தேசியம் பத்திரிகையை
வலுவடையச் செய்யுங்கள்.

*No. 27, Kannathiddy Road, Jaffna.*
*Tel : 021 222 7557*
*E-mail : thesiyamnews@gmail.com*
*Whatsapp : +94 76 567 3339*

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME

# மைத்திரி ஆட்சியிலேயே சீனர்களுக்கு கடலட்டை பண்ணைக்கான அனுமதி வழங்கப்பட்டது – ஈ.பி.டி.பி. ஊடகப் பேச்சாளர்




மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்திலேயே சீனர்களுக்கு கடலட்டை பண்ணைக்கான அனுமதி வழங்கப்பட்டது என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளரும் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான ஐயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எமது கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களது துறைசார்ந்த அமைசினது ஆளுகைக்குள் உள்ள விடயத்தை, உண்மைத்தன்மையை விளங்கிக்கொள்ளாமல், இங்குள்ள தனது சில கட்சி முகவர்களது கருத்துக்களை ஆராயாமல் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

அப்போது பாரம்பரிய கடற்றொழில் முறைமை பாதிக்கப்படுவதாகவும், சிறு தொழிலாளர்கள் தம் தொழிலை இழக்கும் நிலைமை உருவாகி வருவதாகவும் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் திட்டமிடலின் பயனாக, இன்று சிறு தொழில்களில் ஈடுபட்ட பலரில் கணிசமானவர்கள் கடலட்டை பண்ணை நடத்தும் நிலைக்கு உயர்ந்துள்ளனர்.

அதேவேளை, கடலட்டை பண்ணைக்குரிய அனுமதிகள், அது தொடர்பான துறைசார் ஆட்சி நிறுவனங்களினால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, உறுதிசெய்யப்பட்ட பின்னரே அப்பகுதி சங்கங்களின் அங்கீகாரங்களுடன் பண்ணைக்குரிய இடங்கள் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதனை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிந்து கொள்ள விரும்பின், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக அத்தகவல்களை சுயாதீனமாக பெற்றுக்கொள்ள முடியும்.

அதை விடுத்து, அவர் இவ்வாறாக தனது முகவர்களது உண்மைக்கு புறம்பான கருத்துக்களை பிரதிபலிக்க முனைவது அவரது மாண்புக்கு இழுக்கை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சியில் இருந்த காலப் பகுதியிலேயே யாழ். அரியாலை பகுதியில் கடலட்டை குஞ்சுகளை வளர்ப்பதற்கான அனுமதி சீன நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

அந்த காலப்பகுதியில் வழங்கப்பட்ட அனுமதிகளுக்கான அவதூறை இன்றைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது சுமத்தும் அரசியல் நோக்கத்துக்காக கூறப்பட்ட அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்பது யாவரும் அறிந்ததே என்றார்.

# 22 ஆண்டுகள் பின் சிறையிலிருந்து வெளிவந்த அரசியல் கைதியை சந்தித்த சித்தார்த்தன் எம்.பி.!





22 ஆண்டுகள் அரசியல் கைதியாக சிறையிலிருந்து அண்மையில் விடுதலையான பிரம்ம ஸ்ரீ ரகுபதி சர்மாவை பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் நேரில் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

இதன்போது தான் சிறையில் இருந்து விடுதலையாவதற்கு தொடர்ச்சியாக குரல் கொடுத்ததற்கும் சிறையில் பலதடவைகள் தன்னை நேரில் வந்து நலம் விசாரித்ததற்கும் ரகுபதி சர்மா பாராளுமன்ற உறுப்பினருக்கு தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகப்பிரிவு பொறுப்பாளர் இ.தயாபரன், முன்னாள் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ஞா.கிஷோர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஒலுவில் பிரதேசத்தில் கடல் அரிப்புக்கு எல்..எச்.ஐ. நிறுவனமும் பொறுப்பு கூறவேண்டும் : ஹக்கீம் எம்.பி ஆதங்கம்!

ஒலுவில் துறைமுக அலைத்தடுப்பு அணை காரணமாக ஒலுவிலுக்கு வடக்கே இருக்கின்ற பல பிரதேசங்கள் மிகவும் மோசமான கடல் அரிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன.

இதற்கு எல்.எச்.ஐ. நிறுவனமும் பாறுெப்பு கூற வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நோக்கி சபையில் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

ஒலுவில் துறைமுகத்தின் அலைத்தடுப்பு அனை சம்பந்தமான பிரச்சினையில் தொழிநுட்ப ரீதியில் பாரிய கோளாறு உருவாகி, இன்று ஒலுவிலுக்கு வடக்கே இருக்கின்ற நிந்தவூர், காரைதீவு,மலிகைக்காடு வரையான பிரதேசங்கள் மிகவும் மோசமான கடல் அரிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன. இது சம்பந்தமாக எல்.எச்.ஐ. நிறுவனம் பொறுப்பு கூற வேண்டும்.

இந்த நாட்டிலே இருக்கின்ற ஒரே நிறுவனம் என்ற காரணத்தினால் அந்த நிறுவத்தின்



ஊடாக நடக்கின்ற இந்த பிரச்சினைகளுக்கு அவர்கள் எந்த நஷ்ட ஈடும் கொடுப்பதாக இல்லை.

எனவே ஒலுவிலுக்கு வடக்கே இடம்பெறுகின்ற இந்த பாரிய கடல் அரிப்புக்கு எல்.எச்.ஐ. நிறுவனமும் பொறுப்பு கூறவேண்டும் என்பதை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்றவகையில் நீங்களும் கருத்திற்கொள்ள வேண்டும் என்றார்.

இதற்கு கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்த பதிலளிக்கையில், எல்.எச்.ஐ. நிறுவனம் தொடர்பில் கவனத்துக்கு கொண்டுவந்தமை தொடர்பில் நன்றி தெரிவிக்கிறேன்.

ஒலுவில் துறைமுகம் மாத்திரமன்றி நாட்டில் இருக்கின்ற ஏனைய சில இடங்களிலும் கடல் அரிப்பு தொடர்பான ஆய்வுகள் சரியாக இடம் பெறவில்லை. அரசியல் காரணங்களுக்காக அந்த ஆய்வுகள் மறுதலிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டதாக எனக்கு அறியவருகிறது.

அத்துடன் ஒலுவில் தொடர்பில் எனக்கு எழும் கேள்வி என்ன வென்றால், இந்த துறைமுகம் கடந்த 10 வருடங்களாக பயன்பாட்டில் இல்லை.

அப்படியானால் அந்த இடம் அடைக்கப்பட்டு விட்டது. அடைக்கப்பட்ட பின்னரும் ஏனைய இடங்களில் கடல் அரிப்பு இடம்பெறவதாக இருந்தால், அது இதன் காரணமாகவா அல்லது இயற்கை காரணமாகவா என்பது தொடர்பாகவும் ஆராய வேண்டி இருக்கிறது.

இருந்தாலும் சம்பந்தப்பட்டவர்களுடன் நாங்கள் இது தொடர்பாக கலந்துரையாட இருக்கிறோம். அதன்போது உங்களுக்கும் அழைப்பு விடுப்போம். அதில் உங்களது கருத்துக்களை தெரிவிக்க முடியும் என்றார்.

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்சினை! நிர்வாகத்துடன் கிழக்கு ஆளுநர் விசேட கலந்துரையாடல்!







தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து கோணக்கலை தோட்டத்திற்கு இ.தொ.கா தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது தோட்ட தொழிலாளர்களின் அரைச் சம்பளம் தொடர்பான பிரச்சினை, கள அதிகாரியின் அநாகரீகமான நடத்தை மற்றும் ஏனைய தொழிற்சங்க பிரச்சினைகள் குறித்து தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

இக்கலந்துரையாடலின் போது தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சுட்டிக் காட்டப்பட்டதுடன், அப்பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கு நிர்வாகம் ஒப்புக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்.வண்ணை ஸ்ரீ வீரமகாளி அம்மன் ஆலய தொண்டர் சபையினால் மாணவர்களுக்கு உதவிகள் வழங்கிவைப்பு







யாழ்.வண்ணை ஸ்ரீ வீரமகாளி அம்மன் ஆலய தொண்டர் சபையின் ஏற்பாட்டில் ஆலயச் சூழலிற்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டு நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ் வண்ணை ஸ்ரீ வீரகாளி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த ஜூன் 9ஆம் திகதியுடன் ஆரம்பமாகியது.

இந்நிலையில் நேற்று முன்தினம் (06) வைரவர்சாந்தி உற்சவத்தினை முன்னிட்டு ஆலய தொண்டர் சபையின் நிதிப் பங்களிப்பில் ஆலயச் சூழலிற்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் பொருளாதாரத்தில் நலிவடைந்த100 மாணவர்களுக்கு தலா 4000 மதிப்புள்ள கற்றல் உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கான காசோலைகள் (பவுச்சர்கள்) வழங்கிவைப்பட்டன.

இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக செஞ்சோற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், ஆலய குருக்களான சிவதர்சக்குருக்கள், ஹரிதர்சக் கருக்கள் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான காசோலைகளை வழங்கிவைத்தனர்.

சைவ ஆலயங்கள் மக்கள் நலப்பணிகளில் ஈடுபடுவதில்லை என தற்காலத்தில் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் யாழ் வண்ணை ஸ்ரீ வீரகாளி அம்மன் ஆலய தொண்டர் சபையின் ஏற்பாட்டில் இவ்வாறு ஆலயச் சூழலிற்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு கற்றல் மேம்படுத்தல் நலத் திட்டங்கள் மேற்கொள்வது வரவேற்கத்தக்கது என சமூக ஆர்வலர்கள் பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் நாட்டில் நிலவிய பொருளாதார ஸ்திரமின்மையான காலப்பகுதியில் ஆலய தொண்டர் சபையினால் உலர்உணவுப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## பிரபாகரன் உயிருடன்..? ஆதார...

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்துவிட்டார் என்பது உறுதியாகும். அவருடன் மிக நெருக்கமாக செயற்பட்ட கருணா அம்மான், தயா மாஸ்டர் உள்ளிட்டவர்கள் இதற்கு சாட்சி.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் உரிய தகவல்கள் உள்ளன. எனவே இது தொடர்பில் மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருக்க தேவையில்லை. அதனை விட முக்கியத்துவம் செலுத்த வேண்டிய பல்வேறு காரணிகள் உள்ளன.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காக சில குழுக்கள் திட்டமிட்டு செயற்பட்டு வருவதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளன.

அதற்கமைய குறிப்பிட்டவொரு குழுவொன்று வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுத்து. போராட்டத்தின் போது இராணுவம் மற்றும் பொலிஸாரை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் ஹோட்டலொன்றில் பயிற்சி பெற்றுள்ளமை தொடர்பான தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறான குழுக்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவு உள்ளிட்ட பாதுகாப்பு துறை உன்னிப்பான அவதானத்துடனேயே உள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு புலனாய்வு பிரிவின் பலவீனமே காரணம் எனக் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. எமது நாட்டின் புலனாய்வு பிரிவு மிகுந்த பொறுப்புடன் செயற்பட்டு வருகிறது.

அண்மையில் அடிப்படைவாத அரசியல் கட்சியொன்றின் பிரதிநிதிகள் வடக்கிலுள்ள விகாரையொன்றுக்கருகில் ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்போம். உண்மையில் மக்கள் மத்தியில் எவ்வித மத பிரிவினைவாதமும் இல்லை.

அடிப்படைவாத செயற்பாடுகள், கருத்துக்கள் முன்வைக்கப்படுவதன் பின்னணியில் அரசியல்வாதிகளே காணப்படுகின்றனர் என்பது தெரியவந்துள்ளது.

ஆவா குழுக்கள், பாதாள உலக குழுக்கள் என்பவற்றின் செயற்பாடுகள் கடந்த இரு மாதங்களாக அதிகரித்துக் காணப்பட்டது. எனினும் முப்படை, பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் ஒத்துழைப்புடன் இந்த செயற்பாடுகள் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

## முல்லைத்தீவில் அகழப்படும்...

தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில்,

நேற்றுடன் 2, 390 ஆவது நாளாக பல இன்னல்களிற்கு மத்தியில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளிற்காக தெருவிலே நின்று போராடி வருகின்றோம்.

2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காணாமல்போனோர் அலுவலகம் இன்று வரை தனது பணியை செவ்வனே செய்து முடிக்கவில்லை. ஆயினும், ஜெனிவா கூட்டத் தொடர் வருகின்ற காலப் பகுதிகளில் தாமும் வேலை செய்வதாகவும், அவர்களது விபரங்களை பெற்று மக்களிற்கு தாம் பதிலளிப்பதாக காட்டுவதற்காக தமது பணிகளை மும்முரமாக வெளிக்காட்டுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஓ.எம்.பி. அலுவலகம் வந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பங்களை அழைத்து அதற்கான பரிகாரம் வழங்கப் போவதாக அறிய முடிகின்றது.

நாம் பல மாவட்டங்களில், பல இடங்களில் மற்றும் பல காலங்களில் ஓ.எம்.பி. அலுவலகத்தினை எதிர்த்து நின்றோம். அதாவது மாவட்ட ரீதியாக அவர்கள் எந்தவிதமான செயற்படுகளையும் செய்யாதவாறு எதிர்த்தோம்.

இன்றும் நாம் ஓ.எம்.பி.அலுவலகத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை எப்பொழுதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அந்த அலுவலகத்தின் ஊடாகவோ அல்லது இலங்கை அரசாங்கத்தின் ஊடாகவோ தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பதால் தான் 38 ஆவது கூட்டத் தொடரில் இருந்து இன்று வரை ஜெனிவாவில் உண்மையான குரலினை பதிவு செய்து வருகின்றோம்.

ஓ.எம்.பி.அலுவலகம் அரசாங்கத்தை காப்பாற்ற முனையாது விலகி கொள்ள வேண்டும். அரசாங்கத்துடன் சார்ந்து அரச சம்பளம் வாங்கும் மாவட்ட செயலகமாக இருப்பினும் அல்லது பிரதேச செயலகமாக இருப்பினும் அங்கே பணிபுரிபவர்களால் கூட அந்த பதவிகளில் இருப்பதால், எமது உறவுகளின் உயிர்களிற்கு என்ன நடந்தது? என்று கேட்க முடியாமல் உள்ளனர்.

ஆனால், அரசாங்கத்திற்கு சார்பாக வேலை செய்வதற்கு மக்களிடம் வருகின்றனர். மக்களின் பணிகளை சரியாக செய்வதில்லை. தமது தேவைகளிற்காக செல்லும் மக்களை இருக்க வைத்து விட்டு அவர்கள் தொலைபேசியுடன் இருப்பார்கள்.

ஆனால், ஓ.எம்.பி.அலுவலகம் என்றவுடன் அங்கு வழங்கப்படும் மைலோ ஜூஸிற்கும், சிறுண்டிக்குமாக வேலை செய்வதை கண்டிக்கிறோம்.

வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் தமது கல்வி தராதரத்தினை சரியாக பயன்படுத்தல் வேண்டும். ஒரு சில அதிகாரிகள் தமது பிள்ளைகள் பற்றிய செய்திகள் எப்பொழுது வரும் என்று ஏக்கத்துடன் இருக்கும் தாய்மார்களை சொத்து இழப்பீடு என்று கூறி ஓ.எம்.பி. அலுவலகத்தினுள் விட்டு அவை தொடர்பாக விசாரிப்பதாக எத்தினை பேர் கொல்லப்பட்டனர் என்று தமக்கு வேண்டிய விபரங்களை தந்திரமாக எடுத்து கையெழுத்தினை வாங்குகின்றனர்.

எமது கண்ணீர் சும்மா விட மாட்டாது. இதன் மூலம் நிறைய பேர் அனுபவித்துள்ளனர். இவர்களும் இவ்வாறான வேலைகளை செய்ய முன்வந்தால் தாய்மார்களின் கண்ணீர் இவர்களையும் சும்மா விட மாட்டாது.

முல்லைத்தீவில் அகழப்படும் மனித புதைகுழிகள் எங்கிருந்து வந்தன? யாரால் ஆக்கப்பட்டது? அதனை இல்லது ஒழிப்பதற்கு அகழ்வுகள் நடப்பதுதான் அரச படைகளுமிணைந்து அந்த செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த அகழ்வுகள் நீதியான முறையில் இடம்பெறுதல் வேண்டும். லட்ச கணக்கில் எமது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். கையளிக்கப்பட்ட உறவுகளிற்கு என்ன நடந்தது என்று கூற முடியாது அரசு தவிர்த்து வருவதுடன் அரசாங்கத்தினால் ஜெனிவா மற்றும் உலக நாடுகளின் அழுத்தத்திற்கு முகம் கொடுக்க முடியாமல் உள்ளது.

ஆகவே, அரசாங்கம் அழுத்தம் கொடுக்கும் நாடுகளை ஏமாற்றும் நோக்கில் இந்த தடயங்களை அழிக்கலாம். ஆகவே புலம் பெயர் நாடுகளில் உள்ள தமிழர்கள் மட்டுமன்றி மனித நேயத்துடன் உள்ள அனைத்து உலக நாடுகளும் இவை குறித்த உண்மையினை அறிய உதவ வேண்டும் என கேட்டு கொள்வதாகவும் தெரிவித்தார்.

## கொக்குத்தொடுவாய் மனிதப்...

"இலங்கை அரசே கொக்குத்தாடுவாய் மனிதப் புதைகுழி உண்மை, நீதி, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துக" எனும் தொனிப் பொருளில் முல்லைத்தீவு மாவட்டசெயலகத்திற்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை (07) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட பொதுமக்கள் மற்றும், பொது அமைப்புக்கள், சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் என்பன இணைந்து முன்னெடுத்த இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பிரதானமாக சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் அகழ்வுப்பணிகள் இடம்பெறவேண்டும் என்பதனை வலியுறுத்தியிருந்தனர்.

அதேவேளை இலங்கை அரசே உன்கையில் ஒப்படைத்த உறவுகள் எங்கே, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிவேண்டும், கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வில் கண்காணிப்பு வேண்டும், உள்ளிட்ட பதாதைகளைத் தாங்கியவாறும் கோசங்கைளை எழுப்பியும் ஆர்ப்பாட்டதில் ஈடுபட்டனர்.

மேலும் இவ்வார்ப்பாட்டத்தில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் இ.சத்தியசீலன், சமூகசெயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர்இளஞ்செழியன், சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்கா பாதுகாப்புத் தர...

தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை தொடர்பாக உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

வவுனியாவில் அந்நிய முதலீட்டுடன் பாரிய சீனி தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கும், அதற்குரிய பாரிய கரும்புத் தோட்டங்களை அமைப்பதற்கும் அமைச்சரவை அண்மையில் அவசரம் அவசரமாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

அத்தோடு, தொழிற்சாலையின் அமைவிடத்துக்கென கரும்புத் தோட்டங்களை அமைப்பதற்காகவும் முதற்கட்டமாக 74,100 ஏக்கர்கள் அளவு காணியை விடுவிக்கவும் அனுமதி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தை முன்னெடுத்துள்ள தரப்பினர், இது போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கென வாராதுவந்த வரப்பிரசாதம் என்று இனிப்பாய் சிலாகித்து வருகின்றனர். ஆனால், இதன் உண்மைகள் மிகவும் கசப்பானவை. வடக்கில் சீனி தொழிற்சாலை, இனிப்பு தடவிய விஷம்.

அபிவிருத்தித் திட்டமொன்றை முன்னெடுக்கும்போது திட்டத்தின் பொருத்தப்பாட்டை அறிந்துகொள்ள நீர் அடிச்சுவடு என்ற நீரத் தேவையே சூழலியல் குறிகாட்டியாக முதலில் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

கரும்பினதும் சீனியினதும் நீர் அடிச்சுவடு மிகவும் உயர்வானது. ஒரு கிலோ கரும்பை உற்பத்தி செய்வதற்கு 210 லீற்றர் தண்ணீரும் ஒரு கிலோ சுத்திகரிக்கப்பட்ட சீனியை உற்பத்தி செய்வதற்கு 1780 லீற்றர் தண்ணீரும் தேவைப்படுகிறது.

கரும்பு வருடம் முழுவதும் நீர் பாய்ச்ச வேண்டிய ஒரு பல்லாண்டுப் பயிராகும். இவற்றின் அடிப்படையில் பேராறுகள் எதுவுமே இல்லாத வறண்ட வலயமான வடக்கில் பெருமளவு நீரை விழுங்கும் சீனி உற்பத்தியை முன்னெடுப்பது பேராபத்தாகும்.

நீர்ச் சமநிலையை குழப்பி அத்தியாவசிய உணவுப் பயிர்களின் உற்பத்தியிலும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும். ஈற்றில் அந்த மண்ணை பாலையாக்கிவிடும்.

கரும்பு, மிக அதிகளவில் இரசாயன உரங்களையும், பீடை கொல்லி, களைக்கொல்லி நஞ்சுகளையும் வேண்டி நிற்கும் ஒரு பயிராகும். தொடர்ச்சியாக விவசாய இரசாயனங்களால் குளிப்பாட்டப்படும் மண்ணில் நுண்ணங்கிகள் அழிந்து தொடர்ந்து பயிரிட முடியாதவாறு மண் மலடாகிவிடும்.

கந்தளாய் சீனி தொழிற்சாலை மூடப்பட்டிருப்பதற்கு, கரும்பில் இருந்து இனிமேலும் அதிக விளைச்சலை பெறமுடியாதவாறு நிலம் தரம் இழந்துபோனதும் ஒரு காரணம்.

விவசாய இரசாயனங்கள் நீரோடு கலந்து குடிநீரையும் மாசடையச் செய்கிறது. வவுனியா ஏற்கனவே சிறுநீரக நோய்களின் ஆபத்து அதிகமாக உள்ள மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. விவசாய இரசாயனங்கள் கலந்த குடிநீரை அருந்தியதால் ஏராளமானோர் சிறுநீரகங்கள் செயலிழந்து அவதிப்படுகின்றனர்.

இந்நிலையில், கரும்புச் செய்கை வவுனியாவின் நிலத்தினதும் மக்களினதும் ஆரோக்கியத்துக்கு பெருங்கேடாகவே முடியும்.

கரும்புச் செய்கைக்கும் சீனி தொழிற்சாலைக்கும் ஒதுக்கப்பட்ட காணியின் அளவு, வவுனியாவின் மொத்த பரப்பில் ஆறு விழுக்காடுகளுக்கும் அதிகம். இந்தப் பாரிய இடத்தை காடுகளை அழித்தே பெறமுடியும்.

மக்கள் போரினால் இடம்பெயர்ந்ததன் காரணமாக கைவிடப்பட்ட மேய்ச்சல் தரைகளையெல்லாம் அங்கு மரங்கள் வளர்ந்ததை காரணம் காட்டி, காடுகள் என எல்லைகளை வரையறுத்த வனவிலங்கு திணைக்களம் இப்போது அதே காடுகளை கரும்புச் செய்கைக்கு விடுவிப்பதற்கு இணங்கியுள்ளது.

காலநிலை மாற்றங்களால் பாதிக்கப்படப்போகும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் அடங்கியுள்ளதை கருத்திற்கொள்ளாமல், காடுகளை அழித்து சீனி தொழிற்சாலையை அமைப்பது குருட்டுத்தனமான முடிவாகும்.

இது தமிழ் மக்களின் பூர்விக நிலங்களை அபிவிருத்தி என்ற பெயரால் நிரந்தரமாகவே கைகப்படுத்தும் ஒரு தந்திரமுமாகும். சீனி தொழிற்சாலை சிங்கள குடியேற்றத்துக்கும் வித்திடும் என்ற சந்தேகமும் உள்ளது.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கம் விவசாயத்தை மேம்படுத்தல் என்று சொல்லப்பட்டபோதும் அதன் உள்ளார்ந்த நோக்கம் சிங்கள குடியேற்றமாகும். அதுவும், குடியேற்றப்படும் இடத்தின் இன விகிதாசாரப்படி இல்லாமல், இலங்கையின் இன விகிதாசாரத்தின்படியே குடியேற்றங்களை மேற்கொள்வது மகாவலி அதிகார சபையின் எழுதப்படாத அதிகாரம்.

மகாவலியுடன் இணைக்கப்பட்ட கந்தளாய் குளத்தை மையப்படுத்தி நிகழ்ந்த பயிர்ச்செய்கையே தமிழ் நிலமான கந்தளாயை இன்று முற்றுமுழுதாக சிங்களவர்களின் நிலமாக்கியது.

வவுனியாவிலும் "கரும்புக்கு நீர் பாய்ச்சுகிறோம்" என்று சொல்லி வவுனியாவின் குளங்களோடு மகாவலியை தொடுத்து நிலங்களை மகாவலி அதிகார சபை தன்வசமாக்கலாம். மகாவலியில் நீர்வரத்து இருக்கிறதோ, இல்லையோ... இதனூடாக சிங்கள குடியேற்றம் வருவதற்கான வாய்ப்பு மிக அதிகமாகவே உள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட எம் மக்களின் வாழ்வை மேம்படுத்த அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது அவசியம். ஆனால், வடக்கின் மண்ணுக்கும் மக்களுக்கும் பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்கள் எத்தனையோ இருக்கும்போது எவ்விதத்திலும் பொருந்தாத சீனி தொழிற்சாலையை வரவேற்பது அறிவுடையோரினதோ, தமிழ் தேசிய பற்றாளர்களினதோ செயலாக இருக்காது.

நீண்ட நெடிய வலி மிகுந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த இனம் நம்முடையது. இப்போராட்டம் எதிர்கால சந்ததியின் வளமான வாழ்வுக்காக மண்ணின் வளங்களை காப்பாற்றி, அவர்களிடம் கையளிப்பதையும் உள்ளடக்கியதே ஆகும். மண் மீட்கப்புறப்பட்ட நாம் அம்மண் பாலையாவதற்கோ மலடாவதற்கோ எதன் பொருட்டும் அனுமதிக்க முடியாது என்றார்.

## வளங்கள் இருந்தும் எமக்கு...

வளங்களுக்குள் எம்மாலும் பாரிய அபிவிருத்திகளை உருவாக்க முடியும் என்பதனை எமது நாட்டின் அரசுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன் என பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

வளங்கள் இருந்தும் உரிமை அதிகாரம் இல்லாமல் இருக்கின்றோம். இதனையே எமது கட்சியான தமிழரசுக் கட்சியும் காலம் காலமாக வலியுறுத்தி வருகின்றோம்.

இங்கு குறிப்பாக எமது நாட்டில் நடக்கும் சட்ட விரோத மண் அகழ்வு பற்றியும் கவனத்தில் கொண்டு சென்றிருந்தேன். என்றார்.

காலநிலை மாற்றம், சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார நிலைத்தன்மை பிரச்சினைகளில் தொடர்புடைய பங்குதாரர்களிடையே ஓர் புரிதலை உருவாக்கும் விதத்தில் T20 என்னும் அமைப்பினால் இந்தியாவில் மேகல்யா என்னும் நகரத்தில் நடாத்தப்பட்ட செயலமர்வில் விசேட அழைப்பின் பெயரில் பாராளுமன்ற உறுப்பினர் இரா சணக்கியனும் இதில் கலந்துகொண்டிருந்தார்.

இதன் போது சாணக்கியன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதன்போது காலநிலை மாற்றம் மற்றும் பிற சுற்றுச்சூழல் பிரச்சினைகள் எதிர்கால சந்ததியினருக்கு குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும் மற்றும் இவ்வாறான சவால்களை எதிர்கொள்வதில் இளைஞர்களை ஈடுபடுத்துவதன் முக்கியத்துவம் போன்ற விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டன.

இலங்கையும் இவ்வாறனதொரு காலநிலை மாற்றம் தொடர்பில் ஒத்துழைப்பு வழங்குவதாக இருந்தால் எமது மக்களில் சில வாழ்வாதார நடவடிக்கைகள் தாக்கம் செலுத்துவதாக இருப்பினும் அதற்கான மாற்று திட்டத்தை கரிசனையில் கொள்வதன் மூலம் நாமும் எதிர் வரும் காலங்களில் காலநிலை மாற்றத்திற்கான ஒத்துழைப்பை வழங்கமுடியும். மேகல்யா எனப்படும் இவ் மாநிலம் 70 களில் உருவாக்கப்பட்டதாகும்.

இந்த மாநிலம் அங்கு காணப்படும் வளங்களை கொண்டு மிகவும் அபிவிருத்தி அடைந்த இடமாக காணப்படுகின்றது.



# இந்தியாவுக்கு செல்லும் ஜனாதிபதிக்கு அழுத்தங்களை வழங்குங்கள்..! யாழ் மீனவ அமைப்புக்கள் கூட்டாகக் கோரிக்கை..!




இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துவதற்கு கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தங்களை வழங்க வேண்டும் என யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளன உப தலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார் கோரிக்கை முன்வைத்தார்

யாழ் மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கோரிக்கை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று இந்தியா செல்லவுள்ளார்.

இவ்வாறு செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர் கதையாகியுள்ள இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை நிறுத்தமாறு இந்தியா பிரதமருக்கு அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும்.

அது மட்டுமல்லாது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக ஜனாதிபதிக்கு அழுத்தத்தை வழங்குவதோடு கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அழுத்தங்களை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த நெடுந்தீவு கடற்தொழில் சமாசத்தின் உறுப்பினர் சி.றொபின்சன் குருஸ்,

நெடுந்தீவில் சுமார் 850 மேற்பட்ட மீனவ குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் அத்துமீறிய இந்தியா ரோலர் படகுகளினால் சுமார் 2 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட கடற் தொழில் உபகரணங்கள் நாசமாக்கப்பட்டுள்ளது.

இந்தியா ரோலர் படகுகளின் அத்து மீறிய செயற்பாடு காரணமாக எமது வளங்கள் பாதிக்கப்படும் நிலையில் இதுவரை 250 முறைப் பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது .பல குடும்பங்களின் மனைவிமார்களுடைய தாலியை அடகு வைத்து பலர் வலைகளை வாங்கியுள்ள நிலையில் இந்திய ரோலர் படகுகளினால் குறித்த வலைகள் அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் கடற் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தெரியப்படுத்தியுள்ள நிலையில் இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எமது ஆதங்கங்களை இந்திய பிரதமருக்கு பகிரவும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை வலி வடக்கு கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் றீகன் கருத்து தெரிவிக்கையில்,

உள்ளூரில் அனுமதியற்ற சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகள் இடம் பெற்று வருகிறது.இதன் காரணமாக சிறிய மீன்கள் பெருமளவு தடை செய்யப்பட்ட வேலைகளில் அகப்படுவதனால் அதனை கடலிலோ தரையிலோ வீசி விட்டு செல்கிறார்கள். அதன் காரணமாக கடற்தொழிலை நம்பி இருக்கும் பாரம்பரிய மீனவர்கள் கடலில் மீன் இனங்கள் பெருகாத நிலையில் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

# குருந்தூர் மலை கல்வெட்டை முடிந்தால் யுனெஸ்கோ தொல்பொருள் ஆய்வுக்குட்படுத்துங்கள் : சிறிதரன் அரசாங்கத்துக்கு சவால்



முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர்மலையில் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ““கல்வெட்டு““ என தொல்லியல் திணைக்களத்தினால் ஆதாரமாக காட்டப்படும் ““செங்கல்““ எவ்வாறு போலியாக உருவாக்கப்பட்டதென கேள்வியெழுப்பிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபையில் பல விடயங்களைக் கூறியதுடன் அந்த ““கல்வெட்டு““ உண்மையில் 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டதுதான் என்றால் யுனெஸ்கோவையும் சர்வதேச தொல்பொருள் ஆய்வாளர்களையும் அழைத்து ஆய்வு செய்ய அரசு தயாரா எனவும் சவால் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (6) இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

இலங்கையில் தமிழர்களும் தேசிய இனம் என்பதை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். சிங்கள மக்களின் அடையாளத்தையும் மத, உரிமைகளையும் மதிக்கிறோம்.

எமது உரிமைகளையும் அடையாளங்களையும் அழித்து சிங்கள இனத்தை மேம்படுத்த தமிழர்களின் தொன்மையை அழித்து பௌத்த மயமாக்கலை விரிவுப்படுத்துவது முறையற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலையில் நிர்மாணிக்கப்படும் விகாரை பகுதிக்கு நேரடியாக சென்று நீதியரசர் பார்வையிட்டுள்ளார். அங்கிருந்த ஆதி சிவன் ஆலயம் உடைக்கப்பட்டு, அழிக்கப்பட்டு அங்கு புதிய கல்வெட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

அங்கு எவ்வாறு இவ்வாறு கல்வெட்டு வந்தது? புத்தர் விகாரை அமைக்க முன்னர் நானும் சார்ள்ஸ் நிர்மலநாதனும் குருந்தூர் மலை பகுதிக்கு சென்றிருந்தோம். ஆலயங்கள் உடைக்கப்பட்டதை எமது கண்களால் கண்டோம். இவ்வாறான நிலையில் புதிய கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளது.

சீமெந்து கற்களை அறுத்து அதன் மேல் செங்கல் துகள்களை பூசி அதனை புராதன கல்வெட்டாக மாற்றியுள்ளார். இவ்வாறு செய்துவிட்டு இது ஒரு பழைய செங்கல், அது 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட செங்கல் என கதை பரப்புகின்றனர்.

இது அப்பட்டமான பொய். அங்கே அறுக்கப்பட்ட தூண்களை நாம் எமது கண்களால் கண்டோம். சீமெந்து கற்களை கிரவலுக்கு மேலே அறுத்து அந்தக்கிரவலை பழைய கல்லுப் போல் காட்டி அங்கேயுள்ள பாசித்தண்ணியை உற்றி அதனை ஒரு பழைய தொல்பொருள் விகாரை போல் காட்டும் முயற்சியில் தொல்பொருள் திணைக்களமும் படைகளும் அரசும் போலி வேலையை செய்தது என்பதை இந்த உயரிய சபையில் நான் பொறுப்புடன் கூறுகின்றேன்.

நாங்கள் குறிப்பிடுவது பொய் என்றால் அந்த கல்வெட்டு 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டதுதான் என்றால் யுனெஸ்கோவை சர்வதேச தொல்பொருள் ஆய்வாளர்களை அழைத்து ஆய்வு செய்வதற்கு நீங்கள் தயாரா? அவர்கள் வந்து ஆய்வு செய்தி நீதியை சொல்லட்டும்.

பண்பாட்டு, கலாசாரம் மற்றும் மத ரீதியில் நாம் தொடர்ச்சியாக அழிக்கப்படுகிறோம். ஆகவே சர்வதேச அமைப்புக்கள், மனச்சாட்சி உள்ள நிறுவனங்கள் எமக்காக கண் திறக்க வேண்டும் என்பதை இந்த உயரிய சபை ஊடாக வேண்டுகோளாக விடுக்கின்றேன் என்றார்.



# நாட்டில் திருடப்பட்ட சொத்துக்களை மீள பெற்றுக்கொள்ளவும் புதிய சட்டம் கொண்டுவர வேண்டும் : ஹக்கீம் எம்.பி!

ஊழல் மோசடிகளை தடுப்பதற்கு புதிய சட்டம் கொண்டுவருவது போல் திருடப்பட்ட சொத்துக்களை மீள பெற்றுக்கொள்ளவும் புதிய சட்டம் கொண்டுவர வேண்டும்.

அதேபோன்று கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பாக ஆராயவும் இதனுடன் விசேட ஏற்பாடாக இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.



அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், நாட்டில் உள்ள ஊழல் மோசடிகளை நீக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்திருக்கிறது. என்றாலும் சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வுக்குள் எமது நாடு ஆசிய நாடுகளிலேயே முதலாவது நாடாக இடம் பிடித்திருக்கிறது. அதனால் அரசாங்கம் இந்த சட்டத்தில் மாற்றங்களை கொண்டுவர நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன், இலங்கைக்கு எதிரான ஜெனீவா பிரேரணையிலும்கூட எமது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார குற்றச்செயல்கள் தொடர்பாக கவனம் செலுத்துமாறு கூறி இருந்தார்கள்.

பொருளாதார குற்றங்கள் தொடர்பாக கவனம் செலுத்துமாறு மனித உரிமைகள் ஆணைக் குழுவும் இலங்கைக்கு தெரிவித்திருந்தது.

அதனால் ஊழல் மோசடி குற்றச்செயல்கள் தொடர்பாக எமது நாடு பெயர் பெற்றுள்ளது. அதனால் சொத்துக்கள் மற்றும் பிரகடனங்கள் பற்றிய அனைத்தையும் உள்ளடக்கியதாக இந்த ஊழல் எதிர்ப்பு புதிய சட்டமூலத்தை கொண்டுவர வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும், தனியார் துறைகளில் ஏற்படும் ஊழல் மோசடிகள் விளையாட்டுத்துறையில் ஏற்படும் மோசடிகள் மற்றும் பாலியல் இலஞ்சம் அதேபோன்று வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் போது ஏற்படும் மோசடி போன்ற பல புதிய விடயங்கள் இதில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று நாங்கள் திருடப்பட்ட சொத்துக்களை மீள பெற்றுக்கொள்வதற்கானதொரு சட்டமூலத்தையும் கொண்டுவர வேண்டும்.

இந்த சட்டமூலத்தின் பின்னர் நாங்கள் மேற்கொள்ள வேண்டிய விடயங்களும் நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த வருடம் மார்ச் வரை அதற்கான காலம் இருக்கிறது. அதுவரை நாங்கள் காத்திருக்க வேண்டியதில்லை.

எனவே, திருடப்பட்ட சொத்துக்களை மீள பெற்றுக்கொள்ள முடியுமான ஒரு சட்டமூலம் விரைவாக கொண்டுவரப்பட வேண்டும். சட்ட ரீதியில் அதனை திருப்திகரமான முறையில் மீட்க முடியுமான ஒரு நடவடிக்கையை நாங்கள் கையாள வேண்டும். எமது நாட்டில் ஊழல் மோசடிகளை இல்லாமலாக்க ,இது மிகவும் முக்கியமானதாகும். அதேபோன்று கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பாக ஆராயவும் இதனுடன் விசேட ஏற்பாடாக இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளோம். என்றாலும் இது தொடர்பாக எமக்கு இன்னும் பதில் வழங்கப்பட வில்லை என்றார்.



ONE SHOP STOP FOR ALL YOUR FURNITURE & DECOR NEEDS

BIG SALE! BIG SAVINGS

மங்களா காட்சியறை

Mangala

யாழின் தளபாட உற்பத்தியாளர்



Furniture | Furnishing | Contemporary Furniture | Ethnic Furniture | Office Furniture | Exquisite Dining Sets | Upholstered Sofas | Outdoor & Lawn Furniture | Leather Recliner | Sheesham Wood Furniture | Ottomans & Chaises | Bedroom Collections | Bunk Beds | Artifacts | Rugs & Carpets | Mattresses & Poufs | Modular Kitchen | Murals & Paintings & etc.

No. 536, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.

TEL : 021 222 8367 | +94 777 286 069

சசிகா லேணர்ஸ்
SASIKA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- மும்மொழியிலும் வாகனப் பயிற்சி
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்புகள்
- அனைத்து கிளைகளிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்
- தவணைக் கட்டணம் மற்றும் விரும்பிய நேரத்திலான பயிற்சி

தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
0777 226 247 / 077 614 0361 / 021 221 7678 / 021 221 7578
www.sasikalearners.com



கிளை நிறுவனங்கள்

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472 / 070 3013 021

மல்லாகம்
கே.கே.எஸ் வீதி
021 224 3393 / 070 3013 014

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664 / 070 3013 016

யாழ்ப்பாணம்
இல. 281 C, மணிக்கூண்டு கோபுர வீதி
021 222 8004 / 070 3015 004



காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன்
நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை

மகாநதி ஜ்வெல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
MAKANATHY JEWELLERY
Manufacturers of Gold Jewels

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

72A. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

CALL NOW : 077 581 2025

STUDIO Vista
CAPTURING NATURE BEAUTY

PROFESSIONAL
PHOTOGRAPHY



PHOTOGRAPHY STUDIO



BOOK NOW
+94 777 47 4498



EVENT | VIDEO | FASHION | WEDDING |
CORPORATE | MATERNITY | COMMERCIAL |
STUDIOS | FRAMES | ALBUM DESIGNING |
ALBUM MAKING | VIDEO EDITING | MUG &
ALL SUBLIMATION PRINTING...

K.K.S ROAD, THAVADY JUNCTION, KONDAVIL, JAFFNA.



இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.